# இந்து மதத்தில் பெண்தெய்வ வழிபாடு: யாழ்ப்பாணம் - வலிகாமம் மேற்குப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

**Supervisor**
*Miss. S. Selvakumari,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. Y. Ketheeeswary,*
*Department of Languages,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

## ஆய்வுச் சுருக்கம்

இந்து சமயம் சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் எனும் அறுவகைச் சமயநெறிகளையுடையது. இவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் கடவுளரைத் தலைமைத்தெய்வமாக கொள்ளும் கோட்பாட்டிற்கு அமைய சாக்த சமயம் சக்தியைப் பரம்பொருளாகக் கொண்டது. சக்தியானவள் பல நாமங்களையும், வடிவங்களையும் பெறும் போது பல பெண் தெய்வங்களாக வழிபடப்படுகிறாள். சக்தியினுடைய தோற்ற வெளிப்பாடுகள் ஏனைய தெய்வங்களின் வடிவங்களை விடக் கூடுதலாக உள்ளன. இதனால் பல்வேறு தேவைகட்கு ஏற்பவும் ஆன்மாக்களுக்கு நல்லறிவு புகட்டவும் ஆட்கொள்ளவும் பல்வேறு தோற்றப்பாடுகள் கொண்டு பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அந்தந்தப் பெயர்களுக்கேற்ப ஆலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் யாழ்மாவட்ட யாழ்நகரத்தின் வடக்கு நோக்கி உள்ள வலிகாமம் மேற்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெண் தெய்வ வழிபாடு பற்றி இவ்வாய்வு ஆராய்கின்றது. இவ்வகையில், இந்து மதத்தில் பெண் தெய்வங்களினுடைய முக்கியத்துவம் பற்றியும், வணக்க முறையின் சிறப்புப் பற்றியும், இந்து சமூகத்தில் பெண்தெய்வ வழிபாட்டினுடைய வகிபங்கு பற்றியும் இவ்வாய்வு சிறப்பான பார்வையைச் செலுத்துகின்றது.

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது

1. இந்துமத பெண் தெய்வங்களை அடையாளப்படுத்தி ஒரே ஒரு சக்தி பல பெண் கடவுளராக பரிணமிக்கும் தன்மையை எடுத்துக் கூறுதல்.
2. யாழ் மாவட்டத்தில் பெண்தெய்வ வழிபாட்டினுடைய சிறப்பினை எடுத்துக் கூறுதல்.
3. யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் பெண்தெய்வ வழிபாட்டினுடைய முக்கியத்துவத்தினை வெளிக்கொணருதல்.
4. ஆண், பெண் சமத்துவமே சக்தி வழிபாட்டின் தாற்பரியம் என்பதனை ஆய்வின் ஊடாக சமூகத்துக்கு வெளிக்காட்டுதல்

சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு சமூகப்பிணக்குகளை இல்லாமற் செய்யும் வழிபாடாகப் பெண்தெய்வ வழிபாடு காணப்படுகிறது. ஆனால், இவ்வழிபாட்டினுடைய முக்கியத்துவம் சமூகத்துக்கு வெளிக்கொணரப்படாது காணப்படுகிறன்றது என்பது ஆய்வுப் பிரச்சினையாகும்.

'புராதன வழிபாடாகிய பெண் தெய்வவழிபாடு யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பிரதேச மக்களின் அன்றாட வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தது' என்பது ஆய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு முறையியலில் தகவல் சேகரிப்பு, தரவுப் பகுப்பாய்வு, எனும் இரு விடயங்கள் உள்ளடக்கப்படும். தரவுகள் முதலாம் நிலைத் தரவுகளாகவும், இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் காணப்படும். நேர்காணல், வினாக்கொத்து மற்றும் களஆய்வில் பெற்றுக்கொள்ளப்படும் தரவுகள் என்பன முதலாம் நிலைத் தரவுகளாகவும், நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், குறித்த ஆலயங்களில் பெறப்படும் அறிக்கைகள் மற்றும் இணையத்தளக் குறிப்புகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்படும். ஆய்வின் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகளாக வகைப்படுத்தப்பட்டு வரலாற்று ஆய்வு, ஒப்பியல் ஆய்வு என்பவற்றின் மூலம் சமர்ப்பிக்கப்படும்.

இந்துமதத்தில் பெண்தெய்வ வழிபாடு மிகவும் இன்றியமையாத ஓர் இடத்தினைப் பெறுகின்றது. ஈழத்தின் வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டின் தலைநகராக விளங்கும் யாழ்நகரத்தின் வடக்கு நோக்கி உள்ள வலிகாமம் மேற்குப் பகுதியில் சைவசமயப் பாரம்பரியமும் கலாசாரமும் தெய்வ வழிபாடும் பக்திப் பரவசமாக விளங்கும் பல ஆலயங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் பல பெண் தெய்வங்களுக்கான ஆலயங்களாகும். இப்பிரதேசத்தில் வேதாகம முறைகளைப் பின்பற்றி கிரியைகள், விழாக்கள் நடைபெறும் பெரிய ஆலயங்களும், ஆகம முறைகளை முழுமையாகப் பின்பற்றாது வழிபடும் ஆலயங்களும், மரங்கள் வயல்கள் மத்தியில் உள்ள சிறிய ஆலயங்களும் காணப்படுகின்றன.

இப்பிரதேசத்தில் முத்துமாரியம்மன், *காளிஅம்மன்*, பேச்சியம்மன், *மீனாட்சியம்மன்*, நாகம்மாள், நாச்சிமார், கண்ணகையம்மன், மனோன்மணியம்மன், மாரியம்மன், துர்க்கையம்மன், புவனேஸ்வரியம்மன், இராஜேஸ்வரியம்மன், வள்ளியம்மன் ஆகிய பெண் தெய்வங்களுக்கான ஆலயங்கள் பல காணப்படுகின்றன. 1992 இல் நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழ்நிலை காரணமாக மக்கள் தமது அசையும் அசையாச் சொத்துக்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்ட போது பெண்தெய்வ வழிபாடு இங்கு ஸ்தம்பித்த நிலையை அடைந்தது. எனினும் 1996, 1997 களின் பின்னர் மக்கள் மீளக் குடியேறியதன் பயனாக பெண்தெய்வ வழிபாடும் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று ஒரு உன்னத நிலையினை அடைந்துள்ளது. இத்தெய்வங்களுக்கான வழிபாடுகள் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக பெண் தெய்வங்களோடு தொடர்புடைய விரதங்கள், விழாக்கள் என்பன இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன.

இந்துக்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி அகிலமனைத்துக்கும் தாயான பெண்ணைத் தெய்வமாக வழிபடுவதன் மூலம் இந்துமதத்தில் பெண்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தினை அறியலாம். இப்பிரதேசத்தில் ஆண்தெய்வங்களுக்கு இணையாக பெண்தெய்வங்களும் வழிபடப்படுகின்றன். இதனூடாக ஆண், பெண் சமத்துவ நிலை பேணப்படுவதோடு பெண்ணடிமைத்தனமும் நீக்கப்படுகின்றது.

இவ்வாறான பெண்தெய்வ வழிபாடானது மக்கள் மத்தியிலுள்ள பிணக்குகளை இல்லாமற்செய்வதோடு சமூக ஒருமைப்பாட்டினையும் ஏற்படுத்துகின்றது. அதாவது பெண்தெய்வ ஆலயங்களில் நடைபெறுகின்ற கிரியைகள், விழாக்கள், விரதங்கள் மற்றும் சடங்குகள் என்பன இந்துக்களிடமுள்ள பிரச்சினைகளை களைவதற்கு வழிவகுக்கின்றது. ஆலயங்களில் மக்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி வழிபாட்டில் ஈடுபடுகின்ற போதும், வேலைகளை பகிர்ந்து கொள்ளும் போதும், ஒன்றாகக்கூடி உணவுண்ணும் போதும் தம்மிடையேயுள்ள வேற்றுமைகளை மறந்து செயற்படுகின்றனர். அப்போது அவர்களிடமுள்ள பிரச்சினைகள் இல்லாதொழிகின்றன. உறவுகள் புதுப்பிக்கப்படுகின்றன. மேலும் திருவிழாக்காலங்களில் பெண்களுக்கு சமுகத்திலுள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு

சுதந்திரமாக வழிபாட்டில் ஈடுபட வழிவகுக்கின்றது. அதுமட்டுமன்றி இவ்வழிபாட்டின் போது மக்கள் ஏற்றத்தாழ்வின்றி செயற்படுவதனால் சாதி வேறுபாடுகள் களையப்படுகின்றன. ஆலய உற்சவங்களின் போது இந்துக்கள் மத்தியில் உளத்தூய்மை, உடற்தூய்மை என்பன ஏற்படுவது மட்டுமன்றி வீடுகள், சமூகம் என்பனவும் தூய்மைப்படுத்தப்படுகின்றன.

எனவே சமூகத்தோடு மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ள பெண்தெய்வ வழிபாடானது ஆண், பெண் சமத்துவத்தினை ஏற்படுத்துவதோடு சமூக ஒருமைப்பாட்டினையும் இந்துசமய வழிபாட்டின் மரபினை பேணுதலையும் புரிகின்றது. இதனை வலிமேற்குப் பிரதேசத்து பெண்தெய்வ ஆலயங்களில் கண்டு கொள்ளலாம்.